## NSW நோய்த்தடுப்புக் கால அட்டவணை

தற்போதைய NSW நோய்த்தடுப்புக் கால அட்டவணையைப் பார்க்க NSW சுகாதாரத்தின் பின்வரும் வலைத்தளத்திற்குச் செல்க: www.health.nsw.gov.au/schedule

## தடுப்பூசி போட வேண்டிய திகதியைக் குறித்து வையுங்கள்

சரியான நேரத்தில் தடுப்பூசி என்பது உங்கள் குழந்தையில் கடுமையான நோய்களுக்கு எதிரான சிறந்த பாதுகாப்பாகும். 'தடுப்பூசி போட வேண்டிய திகதியைக் குறித்து வையுங்கள்' என்ற கைத்தொலைபேசி பயன்பாடு உங்கள் குழந்தைக்கான தடுப்புமருந்துகள் உரிய காலத்தில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த உதவலாம்.




பயன்பாட்டைப் பதிவிறக்கம் செய்ய 'தடுப்பூசி போட வேண்டிய திகதியைக் குறித்து வையுங்கள்'என்ற வலைத்தளத்தைப் பார்வையிடுவதோடு உங்கள் குடும்பத்தின் பரிந்துரைக்கப்பட்ட நோய்த்தடுப்பு அட்டவணைகளையும் தயாரியுங்கள்: www.health.nsw.gov.au/immunisation




## எனது பிரத்தியேக உடல்நலப் பதிவேடு (Blue Book)

உங்கள் குழந்தைக்கான தடுப்புமருந்தளிப்புகள் மருத்துவர்/தாதியினால் பதிவு செய்யப்பட ஒவ்வொரு சந்திப்பின்போதும் உங்கள் குழந்தையின் 'Blue Book' - இனை எடுத்து வருவது கட்டாயமாகும்.

## வயது வந்தோருக்கான தடுப்புமருந்தளிப்புப் பதிவுப் படிவம்

*வயது வந்தோருக்கான தடுப்புமருந்தளிப்பு பதிவுப் படிவம்* இங்கு கிடைக்கும்: www.health.nsw.gov.au/recordvaccines இது உங்கள் தடுப்புமருந்தளிப்புகளைக் கண்காணிக்க உதவும்.

## மேலதிக தகவல்

### NSW சுகாதாரம்

www.health.nsw.gov.au/immunisation

### ஆஸ்திரேலிய நோய்த்தடுப்புப் பதிவு

https://www.humanservices.gov.au/individuals/services/medicare/australian-immunisation-register

### ஆஸ்திரேலிய அரசின் சுகாதாரத் திணைக்களம்

https://beta.health.gov.au/health-topics/immunisation

### மகப்பேற்றிற்கு முந்திய NSW கக்குவான் இருமல் தடுப்பு மருந்தளிப்புத் திட்டம்

www.health.nsw.gov.au/protectnewborns

SHPN (HP NSW) 190532
July 2019 © NSW Ministry of Health



# கர்ப்பம்

## முன்கூட்டிய கருத்தரிப்பு முதல் பிறப்பு வரையான பாதுகாப்பு மற்றும் தடுப்பூசி



NSW GOVERNMENT

## நீங்கள் கருத்தரிப்பதற்கு முன்பு

நீங்கள் கர்ப்பிணியாகும் முன்பு உங்கள் நோய் எதிர்ப்புத் தன்மை குழந்தைக்கும் கடத்தப்படும் என்பதால் நடப்புக் காலம் வரைக்கும் உங்களுக்கு அனைத்துத் தடுப்பு மருந்துகளும் வழங்கப்பட்டிருக்க வேண்டியது அவசியமாகும். குழந்தைக்குரிய தடுப்பூசிகள் போடப்டுவதற்கு முந்திய சில வாரங்களுக்கு இதன் மூலம் அக்குழந்தைக்கு பாதுகாப்புக் கிடைக்கிறது. சில நோய்கள் உங்கள் கர்ப்பத்தைப் பாதிக்கக் கூடும் எனவே நீங்கள் கர்ப்பிணியாகும் முன்பு பாதுகாப்புப் பெற்றுக்கொள்வது சிறந்தாகும். நீங்கள் பாதுகாப்புப் பெற்றுள்ளீர்களா இல்லையா என்பதை ஒரு எளிய இரத்தப் பரிசோதனை காட்ட முடியும்.

### தட்டம்மை, அம்மைக்கட்டு மற்றும் ரூபெல்லா (MMR)

கர்ப்ப காலத்தில் உங்களுக்கு தட்டம்மை, அம்மைக்கட்டு அல்லது ரூபெல்லா ஏற்பட்டால் உங்களுக்கு கருச்சிதைவு, முன்கூட்டிய பிரசவம் அல்லது உங்கள் குழந்தை கடுமையான பிறப்பு குறைபாடுகளுடன் பிறக்கக்கூடும். நீங்கள் பாதுகாக்கப்படவில்லை என்றால், நீங்கள் தடுப்பூசி போட வேண்டும். **தடுப்பூசி போடப்பட்டதிலிருந்து 28 நாட்களுக்கு நீங்கள் கர்ப்பமடையாக் கூடாது** என்பது முக்கியம்.



### சின்னமுத்து (தட்டம்மை)

கர்ப்ப காலத்தில் சின்னமுத்து ஏற்பட்டால் கடுமையான பிறப்புக் குறைபாடுகளை ஏற்படுத்தும். நீங்கள் பாதுகாக்கப்படாவிட்டால் தடுப்பூசி போட வேண்டும். **தடுப்பூசி போடப்பட்டதைத் தொடர்ந்து நீங்கள் 28 நாட்களுக்கு கர்ப்பமடைவதைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும்.**

## கர்ப்ப காலத்தின்போது

### ஹெபடைடிஸ் B (கல்லீரல் வீக்கம்)

பிரசவத்தின் போது குழந்தைக்கும் இந்த நோய் கடத்தப்படலாம் என்பதால் ‘ஹெபடைடிஸ் B’ (கல்லீரல் வீக்கம்) தொற்று உள்ளதா என சகல கர்ப்பிணிப் பெண்களும் பரிசீலிக்கப்படுவர். உங்களுக்கு இந்நோய் இருந்தால், நீங்கள் ஒரு சிறப்பு மருத்துவரைப் பார்க்க வேண்டியிருக்கலாம் மற்றும் உங்கள் குழந்தை பிறந்த 12 மணி நேரத்திற்குள் இரண்டு ஊசி மருந்துகளைப் பெற வேண்டியிருக்கும். இச்சிகிச்சையளிக்கப்படாவிட்டால் உங்கள் குழந்தைக்கு நீடித்த ‘ஹெபடைடிஸ் B’ தொற்று ஏற்பட்டு, ஈரல் சிதைவு அல்லது ஈரல் புற்றுநோய் போன்ற பாரதூரமான நோய்களுக்கு இட்டுச் செல்லக்கூடும்.

### கக்குவான் இருமல் (pertussis)

கக்குவான் இருமல் தடுப்பூசி பொதுவாக கர்ப்பிணிப் பெண்களுக்கு ஒவ்வொரு கர்ப்பத்தின் 28 வாரங்களில் (20-32 வாரங்களுக்கு இடையில் எப்போது வேண்டுமானாலும் கொடுக்கப்படலாம்) போடப்படும், மேலும் முன்கூட்டிய பிரசவ ஆபத்து அதிக அளவில் இருப்பதாக அடையாளம் காணப்பட்ட பெண்களுக்கு (20 வாரங்களிலிருந்து) கூடிய விரைவில் போடப்பட வேண்டும். நோயெதிர்ப்புப் பொருட்கள் கருப்பையிலுள்ள உங்கள் குழந்தைக்குக் கடத்தப்படுவதால் இது உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் பாதுகாப்பை அளிக்கும். கருத்தரித்திருக்கும் வேளையில் கக்குவான் இருமலுக்கெதிரான தடுப்புமருந்தளிப்பது தாய்க்கும் குழந்தைக்கும் பாதுகாப்பானதே.

உங்கள் துணைவர், உங்கள் குழந்தையின் தாத்தா, பாட்டி மற்றும் வேறு எந்த நெருங்கிய வயதுவந்த பராமரிப்பாளர்களுக்கும் கடந்த 10 ஆண்டுகளில் கக்குவான் இருமல் தடுப்பூசி போடப்படவில்லை என்றால், உங்கள் குழந்தை பிறப்பதற்கு குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்பே தடுப்பூசி போடுமாறு அவர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

### சளிச்சுரம் Flu (influenza)

கர்ப்பக் காலத்தில் சளிச்சுரம் ஏற்படுவதானது குறைப்பிரசவம் மற்றும் பிற சிக்கல்கல்களுடன் பாரதூரமானதாக விளைவுகளை ஏற்படுத்தலாம். கர்ப்பக் காலத்தில் சளிச்சுரத் தடுப்பு மருந்து பாதுகாப்பானதும் பயனளிக்கக்கூடியதுமாகும் மேலும் இது சகல கர்ப்பிணிப் பெண்களுக்கும் மிகவும் பரிந்துரைக்கப்படுதிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு சளிச்சுர தடுப்பு மருந்து இலவசமாகும், மேலும் அது உங்கள் குழந்தைக்கு கருப்பையிலும் பிறந்த ஆரம்ப மாதங்களிலும் பாதுகாப்பை அளிக்கிறது.

## பிரசவத்தின் பின்பு

குழந்தைக்கு நீங்கள் தாய்ப்பாலூட்டிக் கொண்டிருந்தாலும் பிரசவத்தை அடுத்து உடனடியாக வழமையான தடுப்புமருந்துகளை நீங்கள் பெறுவது பாதுகாப்பானதாகும். கர்ப்பக் காலத்தில் கக்குவான் இருமல் தடுப்புமருந்தை நீங்கள் பெறாதிருந்தால் மருத்துவமனையிலிருந்து நீங்கள் செல்வதற்கு முன்பதாக அதனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

குழந்தை பிரசவித்தையடுத்து உங்கள் குழந்தைக்குரிய முதல் தடுப்புமருந்தாகிய ‘ஹெபடைடிஸ் B’ உடனே போடப்பட வேண்டும் என்று விதந்துரைக்கப்படுகிறது. அடுத்து போடப்பட வேண்டிய தடுப்புமருந்துகள் உங்கள் குழந்தைக்கு 6 வாரங்கள் ஆகும்போது கொடுக்கப்பட வேண்டும்.

‘ஹெபடைடிஸ் B’ தொற்றுள்ள தாய்மாருக்குப் பிறந்த குழந்தைகளுக்கு ‘ஹெபடைடிஸ் B’ தடுப்புமருந்தளித்தல்கள் பூரணப்படுத்தப்பட்ட 3 மாதங்களுக்குப் பிறகு அக்குழந்தைகள் பாதுகாப்பு பெற்றுள்ளனாரா என்பதை உறுதிப்படுத்த ஒர் இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். உங்களுக்கும் உங்கள் மருத்துவருக்கும் ‘NSW சுகாதார’த்திலிருந்து இது பற்றிய நினைவூட்டல் கடிதம் ஒன்று அனுப்பப்படும்.

*உங்கள் தடுப்பூசிகளைப் புதுப்பித்த நிலையில் வைத்திருப்பது முக்கியம், ஏனெனில் உங்கள் நோய் எதிர்ப்பு சக்தி உங்கள் குழந்தைக்கும் கடத்தப்படும்.*